ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 19) Apr 2008



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

“ஸ்ரீ அஹோபில தாஸன்” க. ஸ்ரீதரன்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

## அடியேன் உரை

கடந்த மாதம் 22.03.2008 அன்று திருவரங்கத்தமுதனாரின் திருநக்ஷத்ரமாகும். இவரைப் பற்றிய பெரியதிருமுடியடைவுக் குறிப்புகள் அடியேனின் கவனக் குறைவால் கடந்த நம்பெருமாள் விஜய இதழில் இடம் பெறவில்லை. இந்த இதழில் இடம் பெற்றுள்ளது.

இந்த இதழுக்கான முக்கியமான சிறப்பு – பெரியதிருமுடியடைவில் உள்ள பெரியபெருமாள் பற்றிய குறிப்புகள் இந்த இதழில் உள்ளன. பெரியபெருமாளின் திருநக்ஷத்ரம் பங்குனி மாதம் ரேவதி (06.04.2008) ஆகும்.

ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம்

ஶ்ரீஅஹோபிலதாஸன் க. ஶ்ரீதரன்

# உட்பொதிவு

1. ஸ்ரீரங்கராஜஸ்தவம் (உத்தர பாகம்)
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. திருவெழுகூற்றிருக்கை
6. திருமாலை
7. திருவரங்கத்தமுதனார்
8. பெரியபெருமாள்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

## ஸ்ரீரங்கராஜஸ்தவம் – உத்தர பாகம்

(பகுதி – 6)

51. மத்யே விரிஞ்ச கிரிசம் ப்ரதம அவதார:
தத் ஸாம்யத: ஸ்தகயிதும் தவ சேத் ஸ்வரூபம்
கிம் தே பரத்வ பிசுநை: இஹ ரங்கதாமந்
ஸத்த்வ ப்ரவர்த்தந க்ருபா பரிபாலந ஆத்யை:

**பொருள்** – திருவரங்கனே! ப்ரம்மனுக்கும் ருத்ரனுக்கும் இடையே விஷ்ணு என்னும்படியான உனது முதன்மையாக உள்ள திருஅவதாரத்தின் மூலம் அவர்களுடன் (நான்முகன், சிவன்) ஒன்றே என காண்பித்துக் கொள்வது போன்று மாடை செய்து, உன்னுடைய பரத்வ ரூபத்தை மறைத்துக் கொண்டாய். என்றாலும், உன்னுடைய பரத்வத்தை அனைவருக்கும் காண்பித்துக் கொடுக்கும்படியான வேத சாஸ்த்ரங்களைக் காத்தல், கருணை கொண்டு அனைவரையும் ரக்ஷித்தல் முதலான செயல்களால் என்ன பயன்?

**விளக்கம்** – ப்ரம்மன், சிவன் முதலானோர் நடுவே விஷ்ணு என்று எம்பெருமான் அவதரித்தான். இதனை ஒட்டிப் பலரும் இந்த மூவரும் ஒன்றே என்று மயங்கும்படியாகச் செய்தான். இப்படியாகத் தனது மேன்மையை இவன் மறைக்க நினைத்தாலும் – அனவரையும் காக்கும் செயல்கள் போன்ற இவனது மேன்மையான செயல்பாடுகள் இவனைக் காட்டிக் கொடுத்து விடுகின்றனவே! முழுக்க நனைந்தவன் முக்காடு இட்டாற் போல், தனது மேன்மைகளை மறைக்காமல் இவன் இருந்துவிட்டான்.

52. மது: கைடபச்ச இதி ரோதம் விதூய
த்ரயீ திவ்ய சக்ஷுஃ: விதாது: விதாய
ஸ்மரஸி அங்க ரங்கிந் துரங்க அவதார
ஸமஸ்தம் ஜகத் ஜீவயிஷ்யஸி அகஸ்மாத்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதா! மது, கைடபர் என்னும் இரு அசுரர்கள் ப்ரம்மனுக்கு விளைவித்த இடையூறுகளை நீ ஹயக்ரீவனாக அவதரித்து அகற்றினாய்.வேதங்கள் என்னும் கண்களை மீண்டும் நான்முகனுக்கு அளித்தாய். இப்படியாக யாரிடமும் எந்தப் பயனையும் எதிர்பாராமல், இந்த உலகில் உள்ள அனைவரையும் வாழவைத்தாய்.

53. ரங்கதே திமிர கஸ்மர சீத ஸ்வச்ச ஹம்ஸ தநு: இந்து: இவ உத்யந்
வேதபாபி: அநுஜக்ரஹித அர்த்தாந் ஜ்ஞாந யஜ்ஞ ஸுஃதயா ஏவ ஸம்ருத்த்யந்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனே! ஞானம் என்னும் அமிர்தத்தால் நிரம்பிய பூர்ணமான சந்திரன் போன்று, வேதங்களை இழந்ததால் இந்த உலகைப் பீடித்த அஜ்ஞானத்தை விழுங்கவல்ல ஹம்ஸமாக அவதரித்தாய். வேதங்களை இழந்து துன்பத்தில் நின்ற தேவர்களை குளிர்ந்ததும், தூய்மையானதும் ஆகிய வேதம் என்னும் ஒளி கொண்டு அனுக்ரஹம் செய்தாய்.

**விளக்கம்** – "சந்திரன் போன்று" எனக் கூறினாலும், சந்திரனுக்குப் பொருந்தாத "பூர்ணமான" என்னும் பதம் இட்டு, எம்பெருமானை வேறுபடுத்தியது காண்க. சந்திரன் த்னது குளிர்ந்த கிரணங்களை வீசி அனைவரையும் மகிழ வைப்பது போன்று, வேதம் என்னும் ஒளி வீசி தேவர்களை மகிழ வைத்தான்.

54. வடதலம் அதிசய்ய ரங்கதாமந் சயித இவ அர்ணவதர்ணக: பதாப்ஜம்
அதிமுகம் உதரே ஜகந்தி மாதும் நிததித வைஷ்ணவ போக்ய லிப்ஸயா வா

**பொருள்** – திருவரங்கனே! அழகாக சயனித்துள்ள கடலின் குட்டியோ என்று காண்பவர்கள் வியக்கும்வண்ணம் ஆலிலை மீது சயனித்து, தாமரை போன்ற சிறிய திருவடிகளை, திருஉதடுகளில் வைத்தபடி இருந்தாய். இதன் காரணம் என்ன? உனது திருவயிற்றில் உள்ளடக்கிய உலகங்களை மீண்டும் அளப்பதற்காகவா (அல்லது) ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மிகவும் மதுரமாக உள்ள உனது திருவடிகளின் இனிமையை சுவைக்க வேண்டும் என்பதற்காகவா?

**விளக்கம்** – ஆலிலை மீது சயனித்தபடி திருவடிகளை திருவாயில் வைத்தது ஏன் என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். முன்பு த்ரிவிக்ரமனாக வந்து உலகங்களை அளந்தாய். இன்று அந்த உலகங்கள் அனைத்தும் திருவயிற்றிலேயே உள்ளதால், திருவடிகளை வயிற்றுக்குள் கொண்டு சென்று, அளக்கலாம் என்னும் எண்ணமோ? நமது திருவடிகளை ஸ்ரீவைஷ்ணவர்கள் மிகவும் விரும்புகின்றனரே, அப்படி என்ன சுவை இதில் உள்ளது என்று சோதிக்கும் எண்ணமோ? என்றார்.

55. உந்மூல்ய ஆஹர மந்தர அத்ரிம் அஹிநா தம் ஸம்பதாந அமுநா
தோர்ப்பி: சஞ்சல மாலிகை: ச ததி நிர்மாதம் மதாந அம்புதிம்
ஸ்ரீரங்கேச்வர சந்த்ர கௌஸ்துப ஸுதா பூர்வம் க்ருஹாண இதி தே
குர்வாணஸ்ய பலேக்ரஹி: ஹி கமலா லாபேந ஸர்வ: ச்ரம:

**பொருள்** – ஸ்ரீரங்கநாதா! மந்த்ர மலையை வேருடன் பறித்துக் கொண்டு வந்தாய். மிகவும் புகழுடைய வாஸுகி என்னும் நாகத்தினால் அந்த மலையைக் கட்டினாய். உனது திருக்கரங்களால் நீ அணிந்துள்ள அழகான மாலைகள் அசையும்படி, திருப்பாற்கடலைத் தயிர் கடைவது போன்று கடைந்தாய். அந்தக் கடலில் இருந்து சந்த்ரன், கௌஸ்துபமணி, அமிர்தம் போன்ற பலவற்றையும் வெளிக்கொணர்ந்தாய். இப்படியாகப் பல கடினமான செயல்களை நீ செய்தபடி நின்றபோது, உனது சிரமம் அனைத்தும், அந்தக் கடலில் இருந்து பெரியபிராட்டி வெளிப்பட்டதனால் பலன் பெற்றதாயிற்று.

56. தேவீ ஹஸ்த அம்புஜேப்ய: சரணகிஸலயே ஸம்வஹத்ப்ய: அபஹ்ருத்ய
ப்ரத்யஸ்ய அநந்தபோகம் ஜடிதி சலபுடே சக்ஷுஷீ விஸ்த்ருணாந:
ஆக்ஷிப்ய உர: ச லக்ஷ்ம்யா: ஸ்தந கலச கநத் குங்கும ஸ்தோமபங்காத்
தேவ: ஸ்ரீரங்கதாம கஜபதி குஷிதே வ்யாகுல: ஸ்தாத் புரோ ந:

**பொருள்** – கஜேந்த்ரன் கூக்குரல் இட்டபோது நடந்தது என்ன? திருவடிகளை எப்போதும் வருடியபடி உள்ள பிராட்டிகளின் தாமரை போன்ற திருக்கரங்களில் இருந்து அழகான தளிர் போன்ற திருவடிகளை இழுத்துக் கொண்டான்; ஆதிசேஷனில் இருந்து தனது திருமேனியை சட்டென்று விலக்கினான்; ஸ்ரீரங்கநாச்சியாரின் அழகான ஸ்தனங்களில் தடவப்பட்டிருந்த குங்குமக் குழம்பில் இருந்து தனது திருமார்பை இழுத்துக் கொண்டான்; அவன் கண்கள் துடித்தன; தனது திருக்கண்கள் அலைமோதும்படியாக விழித்துப் பார்த்தான்; தனது நிலை குலைந்து நின்றான் – இப்படிப்பட்ட பெரியபெருமாள், அது போன்ற காட்சியுடனேயே நமது கண்கள் முன்பாக எழுந்தருளுவானாக.

57. அதந்த்ரித சமூபதி ப்ரஹித ஹஸ்தம் அஸ்வீக்ருத
ப்ரணீத மணிபாதுகம் கிம் இதி ச ஆகுல அந்த:புரம்
அவாஹந பரிஷ்க்ரியம் பதகராஜம் ஆரோஹத:
கரிப்ரவர ப்ரும்ஹிதே பகவத: த்வராயை நம:

**பொருள்** – கஜேந்த்ரனின் கூக்குரலானது பெரியபெருமாளின் செவியில் விழுந்தவுடன் ஏற்பட்டது என்ன? ஸேனைமுதலியார் கைகொடுத்ததைக் காணவில்லை; ரத்னக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகைகளை சாற்றிக் கொள்ளவில்லை; "என்ன இது" என்று பிராட்டிமார்கள் திகைத்துப் போய் நின்றனர்; வாகனங்களில் செல்லும் ஆயுத்தங்கள் ஏதும் நிகழவில்லை; கருடவாகனத்திலும் செல்லவில்லை – இப்படியாக இருந்த நம்பெருமாளின் பதற்றத்திற்கும் வேகத்திற்கும் எனது நமஸ்காரங்கள்.

**விளக்கம்** – இங்கு நம்பெருமாள் கஜேந்த்ரனைக் காக்க ஓடிய அவனது உயர்ந்த குணங்களுக்கு நமஸ்காரம் செய்யவில்லை. மாறாக, அவன் விழுந்தடித்துக்கொண்டு ஓடினான் அல்லவா? அந்த வேகத்திற்கு நமஸ்காரம் என்றார். நம்பெருமாள் புறப்பாடு காணும்போது ஸேனை முதலியார் முன்பாக கைகொடுத்து வழி நடத்தல் முறையாகும். இது நடைபெறவில்லை, ஸேனை முதலியாருக்காக இவன் காத்திருக்கப் பொறுமையில்லை. திருவடிகளில் பாதுகைகளைச் சாற்றிக் கொள்ள இவனுக்குப் பொறுமையில்லை. கருடன் வரும்வரை காத்திருக்கவும் பொறுமை இல்லை.

58. யம் பச்யந் விச்வ துர்யாம் தியம் அஸக்ருத் அதோ மந்தாரம் மந்யமாந:
ஹுங்கார ஆஸ்பாலந அங்க்ரி ப்ரஹதிபி: தம் தார்க்ஷ்யம் அத்யக்ஷிப: த்வம்
கிஞ்ச உதஞ்சந் உதஸ்தா: தமத கஜபதே: ப்ரும்ஹிதே ஜ்ரும்பமாணே
தேவ! ஸ்ரீரங்கபந்தோ! ப்ரணமதி ஹி ஜநே காந்திசீகீ தசா தே

**பொருள்** – திருவரங்கத்தின் பந்துவாக உள்ள பெரியபெருமாளே! கஜேந்த்ரனின் கூக்குரல் மேலும் அதிகரிக்கவே, நீ பெரியதிருவடியான கருடனை நோக்கினாய். சிறிதும் ஓய்வில்லாமல், அனைத்து உலகங்களையும் நியமித்தபடி உள்ள உனது ஸத்ய ஸங்கல்பத்தைக் காட்டிலும் விரைவாகச் செல்ல கருடன் முனைந்தான். அந்த வேகமும் போதாது என்று பார்த்த நீ கருடனை இன்னமும் விரைந்து செல்லும்படி

அதட்டியும், திருகரங்களால் தட்டியும், திருவடிகளால் உதைத்தபடியும் இருந்தாய். அதன் பின்னரும் அவன் வேகம் கண்டு த்ருப்தி கொள்ளாமல், அவனையும் உனது திருக்கரங்களால் தூக்கியபடி சென்றாய். இதனைக் காணும்போது, அடியார்களைக் காக்கும் விஷயத்தின் உனது நிலையானது, "எங்கு செல்கிறோம்" என்று புரியாமல் ஓடுபவனைப் போன்று உள்ளது.

**விளக்கம்** – எம்பெருமானின் ஸங்கல்பத்தினுடைய வேகமானது மனதி வேகத்தைக் காட்டிலும் பலமடங்கு அதிகமானது. அந்த ஸங்கல்பத்தின் வேகத்தைக் காட்டிலும் தான் வேகமாகச் செல்லவேண்டும் என்று கருடன் எண்ணினான். ஆனால் அந்த வேகமும் குறைவே என்பது பெரியபெருமாளின் எண்ணமாக இருந்தது. இதனால் கருடனைப் பலமாக அதட்டியபடி சென்றான். அப்படியும் கருடனின் வேகம் குறைவு என்று எண்ணிய பெரியபெருமாள் கருடனைத் தானே தூக்கியபடி வேகமாகச் சென்றான் என்றார். இதன் மூலம் அவன் அடியார்களைக் காக்கச் செல்லும் வேகம் உணர்த்தப்பட்டது.

59. ஸ்ரீரங்கேசய! சரணம் மம அஸி வாத்யா
வ்யாலோலத் கமல தடாக தாண்டவேந
ஸ்ரக் பூஷா அம்பரம் அயதாயதம் ததாந:
திக் மாம் இதி அநுகஜகர்ஜம் ஆஜகந்த

**பொருள்** – ஸ்ரீரங்கநாதா! கஜேந்த்ரனின் கூக்குரலைக் கேட்டவுடன், "அடடா! கெட்டோமே", என்று நொந்து கொண்டாய். திருமாலை மற்றும் உள்ள திருவாபரணங்கள் இடம் மாறி அணிந்து கொண்டவனாகப் புறப்பட்டாய். மிகப் பலத்த காற்றால் அலைக்கழிக்கப்படும் தாமரைக் குளம் போன்று, கலக்கத்துடன் உள்ள திருமுகம் கொண்டவனாக நீ அங்கு சென்றாய். இப்படிப்பட்ட நீ அடியேனுக்கு ஏற்ற புகலிடமாக உள்ளாய்.

60. மீநதநு: த்வம் நாவி நிதாய ஸ்திர சர பரிகரம் அநுமநு பகவந்
வேதஸநாபி ஸ்வோக்தி விநோதை: அகலித லய பயலவம் அமும் அவஹ:

**பொருள்** – பெரியபெருமாளே! ப்ரளய உண்டானபோது நீ மீனாக உருவம் எடுத்துக் கொண்டாய். அப்போது மநுமஹரிஷி என்பவரிடம் (இவர் ஸத்யவ்ரதன் என்றும் கூறப்படுவார்) ஒரு கப்பலில் அமருமாறு கட்டளையிட்டு, அந்தக் கப்பலில் அனைத்து விதமான உயிர்களையும் வைத்தாய். பின்னர் வேதமே வடிவமாக உள்ள உனது மாயை நிரம்பிய சொற்களால், ப்ரளய பயம் ஏதும் சிறிதும் இல்லாமல் மேலே கூறப்பட்டபடியான செயல்களைச் செய்தாய்.

**விளக்கம்** – இந்தச் ச்லோகம் தொடங்கி ச்லோகம் 73-வரை எம்பெருமானின் தசாவதாரங்களைக் கூறுகிறார். இங்கு முதலில் மத்ஸ்ய அவதாரத்தைக் கூறுகிறார். ஸத்யவ்ரதர் என்பவரிடம் மீனாக வந்த எம்பெருமான் அவரிடம், "இன்னம் ஏழு நாட்களில் அனைத்து உலகங்களும் மூழ்கிவிடும்", எனக்கூறி, அவரை ஒரு கப்பலில் அமரவைத்து, அவருடன் அனைத்து உயிர்களையும், மரங்களையும் வைத்தான்.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 19)

3-3-12 ப்ரியசிரஸ்த்வாத்ய ப்ராப்தி: உபசயாபசயௌ ஹி

**பொருள்** – ப்ரியசிரஸ்த்வம் போன்ற குணங்களை அனைத்து வித்யைகளிலும் படிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை – காரணம், உறுப்பு பேதங்களை ஏற்றால் வளர்தல்-குறைதல் போன்ற தோஷங்கள் உண்டாகும்.

**ஸித்தாந்தம்** – (கடந்த சூத்திரத்தின் பூர்வபக்ஷத்திற்கு உரியது) – ப்ரியசிரஸ்த்வம் போன்றவை ப்ரஹ்மத்தின் குணங்கள் அல்ல. ஆகவே அவற்றை அனைத்து வித்யைகளிலும் படிக்க வேண்டியதில்லை. அது போன்ற தன்மைகள் ப்ரஹ்மத்திற்குப் புருஷ ரூபம் கற்பிக்க மட்டுமே உதவும்படி உள்ளன. அவற்றை ப்ரஹ்மத்தின் குணமாகக் கொண்டால், ப்ரஹ்மத்திற்குப் பல்வேறு அவயவ பேதங்கள் (உடல் உறுப்பு பேதங்கள்) உள்ளதாகக் கொள்ளவேண்டி வரும். அப்படிக் கூறும்போது, தலை-வால் முதலான அவயவங்கள் வளர்தல், குறைதல் ஆகியவற்றுக்கு இலக்காவது போல், ப்ரஹ்மத்திற்கும் இவ்விதமான தோஷங்கள் ஏற்படும். இந்தக் கருத்தானது தைத்திரீய ஆநந்தவல்லீ (2-1) – ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம – ஸத்யமானது, ஞானமயமானது, எல்லையற்றது ப்ரஹ்மம் – என்பதற்கு முரணாகிவிடும்.

**பூர்வபக்ஷம்** – இவ்விதம் ப்ரஹ்மத்துடன் தொடர்புடைய அனைத்து குணங்களையும் அனைத்து வித்யைகளிலும் படிக்கவேண்டும் என்றால், ப்ரஹ்மத்தை விட்டுச் சிறிதும் அகலாதவைகளும் எண்ணற்றவைகளாகவும் உள்ள – ஐச்வர்யம், காம்பீர்யம், ஔதார்யம், காருண்யம் போன்ற எண்ணற்ற திருக்கல்யாண குணங்களையும் படிக்க வேண்டும் என்றாகிறது. இவை கணக்கற்று உள்ளதால், இவ்விதம் அனைத்திலும் படிப்பது இயலாது அல்லவோ? (இதற்கான விடையை அடுத்த சூத்திரம் அளிக்கிறது).

3-3-13 இதரே து அர்த்த ஸாமாந்யாத்

**பொருள்** – மற்றவைகளே ஆகும், காரணம் அவைகளே கூடத் தோன்றுவையாக உள்ளன.

**ஸித்தாந்தம்** - (கடந்த சூத்திரத்தின் பூர்வபக்ஷத்திற்கு உரியது) – சூத்திரத்தில் உள்ள து என்னும் பதம் கடந்த சூத்திரத்தில் உள்ள பூர்வபக்ஷத்தைத் தள்ளுகிறது. இதரே – ஆனந்தம் முதலானவைகள், அர்த்த ஸாமாந்யாத் – மற்றவைகள் போன்றே உள்ளதால் ஆகும். ப்ரஹ்மம் என்னும் அர்த்தத்தின் ஸ்வரூபத்தை நிரூபிக்கவல்ல தன்மைகளாக உள்ள இவை, அந்த அர்த்தமாகிய ப்ரஹ்மம் தோன்றும்போது தாங்களும் சேர்ந்தே தோன்றுகின்றன. ஆக இவை ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் போன்று எங்கும் தொடர்ந்தே உள்ளன. இப்படிப்பட்ட குணங்கள் எவை என்றால் – ஸத்யத்வம், ஞானத்வம், அநந்தத்வம், அமலத்வம் ஆகும். ப்ரஹ்மமே இந்த உலகின் காரணமாக உள்ளது என்பதை தைத்திரீயம் (3-1) – யதோ வா இமாநி – எதில் இருந்து இவை அனைத்தும் – என்றது. இத்தகைய ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் என்பது:

- தைத்திரீயம் (2-1) – ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம – ஸத்யமானது, ஞானமயமானது, எல்லையற்றது ப்ரஹ்மம்
- தைத்திரீயம் (3-6) – ஆனந்தோ ப்ரஹ்ம – ப்ரஹ்மம் ஆனந்தமயமானது

போன்ற வரிகள் மூலம் நிரூபிக்கப்பட்டது. ஆகவே ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைப் பற்றித் தெளிவாக உணர்ந்து கொள்வதற்காக, ப்ரஹ்மத்தின் ஆனந்தம் முதலான குணங்களை அனைத்து வித்யைகளிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றாகிறது. இவ்விதம் நிரூபிக்கப்பட்ட ஸ்வரூபம் கொண்ட ப்ரஹ்மத்திடம் காணப்படும் குணங்களான காருண்யம் போன்றவை, அந்தக் குணங்களைக் கொண்ட ப்ரஹ்மத்தை (குணி) விட்டுப் பிரியாமலேயே உள்ளன. ஆயினும் இவை ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நாம் அறிவதற்கான காரணங்களாக இருப்பதில்லை. எனவே காருண்யம் முதலான குணங்களை எந்த வித்யைகளில் அவை படிக்கப்படுகின்றனவோ அங்கு மட்டுமே அவற்றைப் படித்தால் போதுமானது என்று கூற எந்தவிதமான தடையும் இல்லை.

**சந்தேகம்** – ப்ரியசிரஸ்த்வம் முதலான தன்மைகள் மூலம் வளர்வது, தேய்வது போன்ற தோஷங்கள் உண்டாகிவிடும். ஆகவே இவை ப்ரஹ்மத்தை ஒரு புருஷனாக வடிவமைத்து நமக்கு உணர்த்துவதற்காக மட்டுமே கூறப்பட்டது; இவை உண்மையில் ப்ரஹ்மத்தின் குணங்கள் அல்ல எனக் கொள்ளவேண்டும்

என்று கூறுகிறீர்கள். அப்படி என்றால் – அவை போன்று இல்லாத ப்ரஹ்மம், ஏன் அவற்றால் வர்ணிக்கப்படுகிறது? ஒரு பொருள் போல் இல்லாத மற்றொரு பொருளை, முந்தைய பொருள் போல் எண்ணினால், அவ்விதம் எண்ணுவதற்கு ஏதேனும் காரணம் இருக்கவேண்டும் ("அ" என்னும் பொருள் போன்று "ஆ" என்னும் பொருள் இல்லை என்று வைப்போம். ஆயினும் ஏதோ ஒரு காரணத்தால் "ஆ" என்னும் பொருள், "அ" என்பது போல் உள்ளது என்று எண்ணப்படுகிறது). உதாரணமாக கட உபனிஷத் (3-3) – ஆத்மாநாம் ரதிநம் வித்தி – ஆத்மா தேருக்கு உரிமையாளன் – என்றது. இங்கு ஆத்மாவைத் தேர்வீரன் என்றும், சரீரத்தை தேர் என்றும், அறிவு என்பதைத் தேரோட்டி என்றும், மனதைக் கடிவாளம் என்றும், இந்த்ரியங்களைக் குதிரைகள் என்றும், உலக விஷயங்களைப் பாதை என்றும் உணர்த்தப்பட்டது. இதன் மூலம் உபாஸனம் செய்வதற்குக் கருவிகளாக உள்ள சரீர இந்த்ரியங்களை வசப்படுத்தவேண்டும் என்பதே உணர்த்தப்பட்டது. ஆனால் இது போன்ற மறைமுகமான பயன் அளிப்பதாகவும் இங்கு (ப்ரஹ்மத்திற்கு ப்ரியசிரஸ்த்வம் போன்ற தன்மைகளைக் கூறும் வரிகள்) ஏதும் இல்லை. எனவே ப்ரியசிரஸ்த்வம் போன்றவை ப்ரஹ்மத்தின் குணங்களே என்று அல்லவா கொள்ளவேண்டும்? (அடுத்த சூத்திரம் இந்த ஐயத்தைத் தீர்க்கிறது).

### 3-3-14 ஆத்யாநாய ப்ரயோஜந அபவாத்

பொருள் – வேறு பயன் கூறப்படாததால், உபாஸனையின் பொருட்டே ஆகும்.

**பாஷ்யம்** – (கடந்த சூத்திரத்தின் இறுதியில் உள்ள சந்தேகத்திற்கான விடை) ப்ரியம் போன்றவை ப்ரஹ்மத்தின் தலை, வால் முதலானவைகளாக உருவகம் செய்யப்பட்டதற்கு வேறு எந்தவிதமான பயனும் (உள்நோக்கமும்) இல்லை என்பதால், அது போன்று உருவகப்படுத்தியது என்பது அதன் உபாஸனையின் பொருட்டே ஆகும் என்று கொள்ளவேண்டும். ஆத்யாநம் அல்லது அநுசிந்தநம் என்பது உபாஸனத்தையும் குறிக்கும். இப்படிப்பட்ட உபாஸனம் சாஸ்த்ர ஞானம் என்பதன் மூலம் கைகூடும். இந்த சாஸ்த்ர ஞானம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே தைத்திரீயம் (2-1) – ப்ரஹ்மவித் ஆப்நோதி பரம் – ப்ரஹ்மத்தை உபாஸிப்பவன் உயர்ந்த பலனைப் பெறுகிறான் – போன்ற வரிகள் கூறப்பட்டன. ப்ரஹ்மம் ஆனந்தமயமாக உள்ளது என்பதை அறிவதற்காகவே ப்ரஹ்மத்தை தலை, பக்கம், வால் போன்றவையாகப் பிரித்து, இவற்றை அதன் ப்ரியம் முதலானவற்றுக்கு உருவகம் செய்யப்பட்டது. இது எப்படி உள்ளது என்றால் – அந்நமயமான புருஷன் என்னும் சரீரத்தை தலை, வால் முதலானவை உள்ளதாகக் கூறி புத்தியில் ஏறிட்டுக் கூறுவது போன்றும் (தைத்திரீயம் – தஸ்ய இதம் ஏவ சிர:), ப்ராணமயமான புருஷன் என்று ப்ராணனை எடுத்து (தைத்திரீயம் – தஸ்ய ப்ராண

ஏவ சிர:), அடுத்து மநோமயமான புருஷன் என மனதை எடுத்து, அடுத்து விஜ்ஞானமயமான புருஷன் என்று ஜீவனை எடுத்து, இவை அனைத்திற்கும் ஒவ்வொன்றாக தலை போன்றவை உள்ளதாகப் புத்தியில் நிலைநிறுத்தப்படுகிறது. இதனைப் போன்றே அந்நமயம் தொடக்கமாக உள்ள பலவற்றைக் காட்டிலும் வேறுபட்டவனாக, இவற்றின் அந்தர்யாமியாக உள்ளவனாக இருக்கும் ஆனந்தமயமான ப்ரஹ்மத்தை எடுத்து, அதன் தன்மைகளான ப்ரியம் போன்றவற்றைத் தலை முதலியவைகளாக உருவகம் செய்தனர். இவை புத்தியில் உபாஸனையின் பொருட்டு ஏற்றிக் கூறப்பட்டது. ஆகவே ஆனந்தமயமாக உள்ளவனை உபாஸனையின் பொருட்டு இவ்விதமாகக் கூறப்படுவதால், ப்ரியசிரஸ்த்வம் போன்றவை ப்ரஹ்மத்தின் குணங்கள் அல்ல என்றே கொள்ளவேண்டும்.

### 3-3-15 ஆத்ம சப்தச்ச

**பொருள்** – ஆத்ம சப்தம் உள்ளதால்.

**பாஷ்யம்** – (கடந்த சூத்திர பாஷ்யம் தொடர்கிறது) தைத்திரீயம் (2-5) – அந்யோந்தர ஆத்மா ஆனந்தமய: - என்பதன் மூலம் ஆத்மா என்ற பதத்தினால் ஆனந்தமயன் கூறப்பட்டான். ஆத்மாவிற்கு தலை, பக்கம், வால் போன்ற அவயவங்கள் நிச்சயம் இருக்கமுடியாது. எனவே இது போன்ற அவயவங்கள் ஆனந்தமயமான ப்ரஹ்மத்திற்கும் இல்லை. ஆகவே ப்ரியசிரஸ்த்வம் போன்றவை ப்ரஹ்மத்தின் குணங்கள் அல்ல, அவை உபாஸனையின் பொருட்டே படிக்கப்படுகிறது என்றாகிறது.

**பூர்வபக்ஷம்** – தைத்திரீயம் (2-5) - அந்யோந்தர ஆத்மா ப்ராணமய: - ஆத்மாவிலும் வேறுபட்ட்தாக அதனுள் இருக்கும் ப்ராணன்; (2-3) - அந்யோந்தர ஆத்மா மநோமய: - போன்ற வரிகள் மூலம் ஆத்மா என்னும் பதம் ஆத்மாக்கள் அல்லாத ப்ராணன் போன்ற அசேதன வஸ்துக்களைக் குறிக்கும் வகையிலும் கூறப்பட்டது காண்க. இப்படி உள்ளபோது அந்யோந்தர ஆத்மா ஆனந்தமய: - என்பதில் உள்ள ஆத்மா என்ற பதம் பரமாத்மாவைக் குறிக்கும் என்று எவ்விதம் கூற இயலும்? (அடுத்த சூத்திரம் விடை அளிக்கிறது).

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 19)

ஸத்யஸங்கல்பனான பகவான், ஒருவனை நிக்ராஹவனாக்கக் கோலினால் ப்ரஹ்மா ஸ்வயம்பூச்சதுராநநோ வா ருத்ராஸ் த்ரிநேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா இந்த்ரோ மஹேந்த்ர: ஸுரநாயகோ வா த்ராதும் ந சக்தா யுதி ராமவத்யம் என்கிறபடியே தேவதாந்தரங்கள் ரக்ஷிக்க சக்தரல்லர்கள். ஸர்வதேவதைகளும் ஸுக்ரீவமஹாராஜாதிகளைப் போலே தனக்கு அந்தரங்கபூதராயிருப்பாரும் தன்னையடைந்தானொருவனை நலிய நினைத்தால் ஸக்ருதேவ ப்ரபந்நாய என்கிறபடியே ஸத்யப்ரதிஜ்ஞனான தன் வ்ரதம் குலையாமைக்காக ராவணாதிகளைப் போலே துஷ்ப்ரக்ருதிகளாய் நிராகரிக்க வேண்டுவாரை நிராகரித்தும், ஸ்ரீவாநர வீரர்களைப் போலே ஸத்ப்ரவ்ருத்திகளாய் அநுகூலிப்பிக்க வேண்டுவாரை அநுகூலிப்பித்தும் ஸர்வேச்வரன் ரக்ஷிக்கும்.

**விளக்கம்** – ஸத்யஸங்கல்பனாக உள்ள எம்பெருமான், ஒரு மனிதன் தன்னால் தண்டிக்கப்பட வேண்டியவன் என்று முடிவு செய்துவிட்டால், அந்த மனிதனை எந்த தேவர்களும் காக்கவல்லவர்கள் அல்லர் (யாராலும் காக்க இயலாது). இதனை இராமாயணம் ஸுந்தரகாண்டம் (51-45) - ப்ரஹ்மா ஸ்வயம்பூச்சதுராநநோ வா ருத்ராஸ் த்ரிநேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா இந்த்ரோ மஹேந்த்ர: ஸுரநாயகோ வா த்ராதும் ந சக்தா யுதி ராமவத்யம் – ஒருவன் இராமனால் கொல்லப்பட வேண்டியவன் என்று முடிவான பின்னர், அவனை ப்ரம்மனால் காக்க இயலாது, மூன்று கண்கள் கொண்டவனாக மூன்று உலகங்களை அழித்தவனாக உள்ள சிவனால் காக்க இயலாது, தேவர்களின் தலைவன் என்றும் மஹேந்த்ரன் என்றும் போற்றப்படும் இந்திரனாலும் காக்க இயலாது – என்றது. ஆனால் ஒருவன் எம்பெருமானிடம் அடைக்கலம் என்று புகுந்துவிட்டான் என்றால் - அந்த மனிதனை அனைத்து தேவர்களும் எதிர்த்தாலும் சரி, வானர அரசனான சுக்ரீவன் போன்ற எம்பெருமானின் நெருங்கிய நண்பர்களே எதிர்த்தாலும் சரி, அந்த மனிதனை எம்பெருமான் ரக்ஷித்தே தீருவான். இராமாயணம் யுத்தகாண்டம் (18-33) - ஸக்ருதேவ ப்ரபந்நாய – ஒருமுறை சரணாகதி செய்தாலும் – என்று

கூறுவதற்கு ஏற்ப, ஸத்யத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதி குலையாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, அந்த மனிதனைக் காத்தே தீருவான். இராவணன் போன்று அழிக்கப்பட வேண்டியவர்களை அழித்தும், வானரர்கள் போன்று இதமாகப் பேசவேண்டியவர்களிடம் இதமாகப் பேசியும் விபீஷணனைக் காத்தான் அல்லவோ?

தேவதாந்தரங்கள் பக்கல் காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்தம் யஜந்த இஹ தேவதா: க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா என்கிறபடியே விஷமது துல்யங்களான க்ஷுத்ரபலங்கள் கடுக ஸித்திக்கும். அவை தாமும் லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந்; ஏஷ மாதா பிதா சாபி யுஷ்மாகம் ச பிதாமஹ: மயா அநுசிஷ்டோ பவிதா ஸர்வம்பூத வரப்ரத:; அஸ்ய சைவாநுஜோ ருத்ரோ லலாடாத்ய: ஸமுத்தித: ப்ரஹ்மாநுசிஷ்டோ பவிதா ஸர்வஸத்த்வ வரப்ரத: இத்யாதிகளிற்படியே பகவத்தீநங்கள். யஸ்மாத் பரிமிதம் பலம். ஸாத்விகேஷு து கல்பேஷு மஹாத்ம்யமாதிகம் ஹரே: தேஷ்வேவ யோகஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம் கதிம் என்கையாலே அவர்கள் பக்கல் மோக்ஷம் விளம்பித்தும் கிடையாது.

**விளக்கம்** – மற்ற தேவதைகளை ஆராதிக்கும்போது, அற்பமான பலன்கள் உடனடியாகவே கிடைத்துவிடும். ஆனால் அவை விஷம் தடவிய இனிப்பு போன்றவையாகும். இதனைக் கீதையில் (4-12) - காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்தம் யஜந்த இஹ தேவதா: க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா – கர்மங்களுக்கான பலன் உடனடியாகக் கிட்டவேண்டும் என்று எண்ணுபவர்கள், இங்கு பல தேவதைகளையும் ஆராதிக்கின்றனர்; இதனால் இந்த உலகத்திலேயே கர்மங்களுக்கான பலன் வெகு விரைவாகக் கிடைத்து விடுகின்றது அல்லவோ – என்றான். அந்தத் தேவதைகளை அனைத்தும் தாங்கள் மனிதர்களுக்குப் பலன் அளிக்க பகவானையே அண்டியுள்ளன என்பதைக் கீழே உள்ள வரிகள் மூலம் உணரலாம்:

- ஸ்ரீமத் பகவத் கீதை (7-22) - லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் – மற்ற தேவதைகளை ஆராதிப்பதால் அவற்றின் மூலம் பலனை அடைகிறான், அந்தப் பலன்கள் அவற்றுக்கு என்னாலேயே அளிக்கப்பட்டன.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (349: 76, 77) - ஏஷ மாதா பிதா சாபி யுஷ்மாகம் ச பிதாமஹ: மயா அநுசிஷ்டோ பவிதா ஸர்வம்பூத வரப்ரத:; அஸ்ய சைவாநுஜோ ருத்ரோ லலாடாத்ய: ஸமுத்தித: ப்ரஹ்மாநுசிஷ்டோ பவிதா ஸர்வஸத்த்வ வரப்ரத: - தேவர்களிடம் எம்பெருமான், "இந்த நான்முகன் உங்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் பிதாமகனாகவும் உள்ளான்.

எனது ஆணைக்கு ஏற்ப அனைத்து வரங்களையும் உங்களுக்கு அவன் அளிப்பான். எனது நெற்றியில் இருந்து தோன்றுபவனும், ப்ரம்மனுக்குப் பின்னால் வந்தவனும் ஆகிய சிவன் ப்ரம்மனின் கட்டளைகளுக்கு ஏற்ப அனைவருக்கும் அனைத்து வரங்களையும் அளிப்பான்", என்றான்.

மஹாபாரதம் சாந்திபர்வம் (350-36) - யஸ்மாத் பரிமிதம் பலம் – அவர்கள் (ப்ரம்மன் முதலானோர்) அளிக்கும் பலன்கள் மிகவும் அற்பமானவை – என்பது காண்க. மத்ஸ்ய புராணம் (290-16) - ஸாத்விகேஷு து கல்பேஷு மஹாத்ம்யமாதிகம் ஹரே: தேஷ்வேவ யோகஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம் கதிம் – ஸத்த்வ குணம் மேலோங்கியுள்ள காலகட்டங்களில், ஸ்ரீஹரியின் மேன்மை ஓங்கியுள்ளது; அந்த மேன்மையில் மனதை நிலைநிறுத்தி, சாஸ்த்ர வழிகளில் யோகம் இயற்றுபவர்கள் மிக உயர்ந்த கதியைப் பெறுகின்றனர் – என்றது. இதன் மூலம் எத்தனை காலம் ஆனாலும் மற்ற தேவதைகளால் மோக்ஷம் என்பதை அளிக்க இயலாது என்றாகிறது.

ஸர்வேச்வரன் பக்கல் யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: இத்யாதிகளிற்படியே அதிசயிதமான ஐச்வர்யாதிகளும் வரும். பின்பு விடாய்த்தீரக் கங்காஸ்நாநம் பண்ணப் பாபம் போமாப்போலே விஷயஸ்வபாவத்தாலே ஆநுஷங்கிகமாகப் பாபக்ஷயம் பிறந்து ரஜஸ்தமஸ்ஸுக்கள் தலைசாய்ந்து ஸத்த்வோந்மேஷமுண்டாய் ஜநக அம்பரீஷ கேகயாதிகளுக்குப் போலே க்ரமேண மோக்ஷபர்யந்தமாய் விடும். மோக்ஷோபாய நிஷ்டனாம்போது பஹூநாம் ஜந்மநாமந்தே ஞானவாந் மாம் ப்ரபத்யதே; யே ஜந்மகோடிபி: ஸித்தா: தேஷாமந்தே அத்ர ஸம்ஸ்திதி:; ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ த்யான ஸமாதிபி: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே என்கிறபடியே விளம்பமுண்டு. மோக்ஷருசி பிறந்து வல்லதோருபாயத்திலே மூண்டால் தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யு ஸம்ஸார ஸாகராத் பவாமி ந சிராத் பார்த்த மய்யாவேசித சேதஸாம் என்கிறபடியே மோக்ஷஸித்திக்கு விளம்பமில்லை.

**விளக்கம்** – ஸர்வேச்வரனிடமிருந்து ஒரு மனிதனுக்கு எல்லையற்ற ஐச்வர்யம் கிட்டும் என்பதை மஹாபாரதம் - யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: - ஆயிரம் கோடி யுகங்கள் விஷ்ணுவைக் குறித்துத் தவம் இயற்றி நான்முகன் ப்ரம்ம பதவி பெற்றான் – என்பதன் மூலம் அறியலாம். அதன் பின்னர் நிகழ்வது – தனது தாகம் தீர்த்துக்கொள்ள கங்கையில் இறங்கியவனின் பாவம் மறைமுகமாக அழிந்துவிடுவது போல, இவனது பாவங்களும் நீங்கிவிடுகிறது. அவனது ரஜஸ்

மற்றும் தாமஸ குணங்கள் மெதுவாக மறைந்து, ஸத்த்வ குணம் மேலோங்குகிறது. அதன் பின்னர் அந்த மனிதன் – ஜநகன், அம்பரீஷன், கேகயன் போன்றவர்கள் போலே மோக்ஷம் பெறுகிறான். ஆனால் இவ்விதமான மோக்ஷம் உண்டாக சற்று தாமதம் ஏற்படலாம். இதனைக் கீழே உள்ள வரிகள் மூலமாக உணரலாம்:

- ஸ்ரீமத் பகவத் கீதை (7-19) - பஹூநாம் ஜந்மநாமந்தே ஞானவாந் மாம் ப்ரபத்யதே - புண்ணியம் நிறைந்த பல பிறவிகளுக்குப் பின்னர் ஒருவன் ஞானியாகி என்னை வணங்குகிறான்.

- பௌஷ்கர ஸம்ஹிதை (38-305) - யே ஜந்மகோடிபி: ஸித்தா: தேஷாமந்தே அத்ர ஸம்ஸ்திதி: - பல கோடி பிறவிகளில் எம்பெருமானிடமிருந்து ஐச்வர்யம் போன்றவற்றைப் பெற்றவர்களே பக்தி முதலியவற்றில் நிலைநிற்பார்கள்.

- பாஞ்சராத்ரம் - ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ த்யான ஸமாதிபி: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே – பல ஆயிரம் பிறவிகளில் செய்த தவம், த்யானம் மற்றும் யோகம் ஆகிய காரணங்களால் தங்கள் பாவங்கள் அனைத்தும் நீங்கப்பெற்றவர்களே க்ருஷ்ணனிடம் பக்தியைப் பெறுவார்கள்.

ஆனால் மோக்ஷத்தின் மீது ஆழ்ந்த ருசி உண்டாகி, சிறந்த ஓர் உபாயத்தைக் கைக்கொள்ளும்போது, மோக்ஷம் உடனடியாகவே கிட்டிவிடுகிறது. இதனைக் கண்ணன் (கீதை: 12-7) - தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யு ஸம்ஸார ஸாகராத் பவாமி ந சிராத் பார்த்த மய்யாவேசித சேதஸாம் – யார் என்னிடம் மனம் வைத்தார்களோ அவர்களை, அவர்களுக்கு யமன் போன்றுள்ள ஸம்ஸாரக் கடலில் இருந்து மிகவும் விரைவாக நான் தூக்கிவிடுகிறேன் – என்றான்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 19)

99. அங்ஙனன்றிக்கே, இவை தன்னை ஆச்ரயமாகவுடையனென்னவுமாம்.

அவதாரிகை – பஹுவ்ரீஹி ஸமாஸார்த்தத்தை அருளிச்செய்கிறார் - அங்ஙனன்றிக்கே, இவை தன்னை ஆச்ரயமாகவுடையனென்னவுமாம் – என்று.

**விளக்கம்** - இனி நாரங்களை இருப்பிடமாகக் கொண்டவன் என்னும் பஹுவ்ரீஹி ஸமாஸத்தின் பொருளை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது – இவற்றுக்கு ஆச்ரயமென்று தத்புருஷனாகச் சொல்லுகையன்றிக்கே, "இவை தன்னை ஆச்ரயமாகவுடையன்", என்று பஹுவ்ரீஹியாகச் சொல்லவுமாம் – என்கை. "இவற்றுக்கு ஆச்ரயம்" என்கிறவிடத்தில் குணங்களையும் சொல்லிற்றேயாகிலும், "இவை தன்னை ஆச்ரயமாகவுடையன்" என்கிற இடத்தில், குணங்களையொழியச் சொல்ல வேணும்: அக்குணங்களுக்கு வ்யாப்யத்வம் சொல்லு மளவில், ஆத்மாச்ரயமும் அநவஸ்தையுமாகிற தோஷங்கள் வருமாகையாலே – "தன் குணங்களிலே ஈச்வரன் வ்யாபிக்கும்போது குண விசிஷ்டனாயே வ்யாபிக்க வேணும், நிர்க்குணமாய் வஸ்து இராமையாலே; அப்போது, வ்யாப்ய குணங்களே வ்யாபக குணங்களாயறுகையாலே, ஆத்மாச்ரய தோஷமுண்டாம்; அதுக்கு மேலே தன் குணங்களிலே குணி வ்யாபிக்கவென்று புக்கால், ததாச்ரயமான குணங்களையும் குணி வ்யாபிக்கவேணும். அந்த வ்யாபகனுடைய குணங்களையும் குணி வ்யாபிக்க வேணும். ஆகையாலே, அநவஸ்தாதுஸ்தமாம்", என்ற இது தன்னை ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளை அருளிச் செய்தாரிறே.

**விளக்கம்** – தத்புருஷ ஸமாஸத்தில் எம்பொருமான் நாரங்களுக்கு இருப்பிடமாக உள்ளான் என்று கூறுவதற்குப் பதிலாக, அவனால் நாரங்கள் உள்ளன என்றும் கூறலாம். நாரங்களுக்கு இருப்பிடம் என்ற பொருள் வரும்படி – இவற்றுக்கு ஆச்ரயம் - என்று கூறும்போது, ”நார” என்ற பதத்திற்கு எம்பெருமானின் குணங்களையும் பொருளாகக் கூறலாம். ஆனால் நாரங்கள் அவனால் வ்யாபிக்கப்படுகின்றன என்னும் பொருள் வரும்படி - இவை தன்னை ஆச்ரயமாக உடையவன் – என்பதில் உள்ள "நார" என்ற பதம் மூலம், அவனது குணங்களைக் கூற இயலாது, காரணம் என்ன? இவ்விதம் கூறினால், ஆத்மாச்ரய தோஷமும், அநவஸ்தை என்ற தோஷமும் ஏற்படும். இவற்றை ஆச்சான்பிள்ளை – தன் குணங்களில் ஈச்வரன் பரவி நிற்கும்போது அந்தக் குணங்களுடன் கூடியவனாகவே அவன் பரவி நிற்கிறான். அவனது குணங்கள் இல்லாத வஸ்துக்கள் இல்லாமையால் இது பொருந்தும். இப்படிக் கொள்ளும்போது வ்யாபிக்கப்படும் குணங்களே வ்யாபிக்கும் குணங்களாகவும், வ்யாபிக்கும் குணங்களே வ்யாபிக்கப் பட்டுள்ள குணங்களாகவும் ஆகிவிடும். இதுவே ஆத்மாச்ரய தோஷம் என்பதாகும். இந்த தோஷம் நீங்குவதற்காக, ஈச்வரன் ஒரு சில குணங்களுடன் மட்டுமே நின்று, மற்ற குணங்களில் வ்யாபிக்கிறான் என்று கூறலாம். அப்படிக் கொண்டாலும், அவன் வ்யாபித்துள்ள சில குணங்களில், சில குணங்களுடன் கூடிய அவன் வ்யாபிக்கிறான் என்று இப்படியே நீண்டு கொண்டே செல்லும். இது அநவஸ்தை என்னும் தோஷம் ஆகும் - என்று அருளிச்செய்தார்.

100. இவையிரண்டாலும் பலித்தது பரத்வஸௌலப்யங்கள்.

அவதாரிகை – இவ்வுபய ஸமாஸத்தாலும் பலிதாம்சத்தை அருளிச் செய்கிறார் - இவையிரண்டாலும் - என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த இரு சூர்ணைகளில் விளக்கப்பட்ட இரண்டு ஸமாஸங்களால் வெளிவரும் அர்த்தத்தை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, நாரங்களுக்கு அயநம், நாரங்களை அயநமாகவுடையவன் என்கிற இவை இரண்டாலும் பலித்த அர்த்தம் – தன்னையொழிந்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும், தான் ஆதாரமாயிருக்கையாகிற பரத்வமும்; இப்படிப் பெரியனான தான், ஸகல சேதநாசேதநங்களிலும் தன்னையமைத்துக் கொண்டு புக்கிருக்கையாகிற ஸௌலப்யமும் – என்கை.

**விளக்கம்** - நாரங்களுக்கு அயனம், நாரங்களை அயனமாக உடையவன் – நாரங்களுக்கு இருப்பிடம், நாரங்களை இருப்பிடமாகக் கொண்டவன் – என்ற இரண்டாலும் வெளிப்படுவது என்னவென்றால் – தன்னைத் தவிர உள்ள மற்ற அனைத்து வஸ்துக்களுக்கும், தானே ஆதாரமாக உள்ள பரத்வம் என்ற மேன்மை; இவ்விதமாக மிகவும் உயர்ந்தவனாக உள்ள தான், அனைத்து சேதன அசேதனங்களிலும் புகும்படியான எளிமை - ஆகிய இரண்டும் வெளிப்படுகின்றன.

101. அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம்.

அவதாரிகை - இன்னமும் ஒரு ப்ரகாரத்தாலே இந்த ஸமாஸ த்வய பலிதங்களை அருளிச் செய்கிறார் - அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம் – என்று.

**விளக்கம்** – மேலும் ஒரு விதம் மூலம் இந்த இரண்டு ஸமாஸங்களால் உணர்த்தப்படும் அர்த்தத்தை உணர்த்துகின்றார்.

வ்யாக்யானம் - அதாவது பஹுவ்ரீஹியும் தத்புருஷனுமாகிற உபயஸமாஸத்தாலும் பலித்தது – அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளிற் சொல்லுகிறபடியே - அகில சேதநா சேதநங்களிலும் அந்தராத்மதயா அவஸ்திதனாய்க் கொண்டு நியந்தாவாயிருக்கையாகிற அந்தர்யாமித்வமும், இண்கதௌ என்கிற தாதுவிலேயாதல், அயகதௌ என்கிற தாதுவிலேயாதல் ஸித்தமான அயந பதத்தில் கரணே வ்யுத்பத்தியாலும் கர்மணி வ்யுத்பத்தியாலும் ப்ரகாசிதமான உபாயத்வமும் உபேயத்வமுமாகவுமாம் – என்கை. பஹுவ்ரீஹி யோஜனை சொல்லுகிறவிடத்திலே யோக்யாதாநு குணமாக நார சப்தத்தை குணங்களையொழிந்த வஸ்துக்களுக்கு வாசகமாகக் கொண்டாப்போலே தத்புருஷ யோஜநையிலும் அயந சப்தத்தை உபாயோபேய வாசியாகக் கொள்ளுமளவில் யோக்யதாநுகுணமாக நார சப்தத்தை அசேதநங்களை ஒழிந்த சேதந வஸ்துக்களுக்கு வாசகமாகக் கொள்ளக் கடவது. நாரஸ்த்விதி ஸர்வ பும்ஸாம் ஸமூஹ: பரிகத்யதே கதிராலபம்பநம் தஸ்ய தேந நாராயணஸ் ஸ்ம்ருத: என்றும், நாரசப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதேபுதை: தேஷாமயந பூதத்வாந் நாராயண இஹோச்யதே என்றும் இத்யாதிகளிலே இவ்வர்த்தம் சொல்லப்படா நின்றதிறே.

**விளக்கம்** - பஹுவ்ரீஹி ஸமாஸத்தாலும், தத் புருஷ ஸமாஸத்தாலும் எம்பெருமானின் அந்தர்யாமித்வமும் உபேயத்வமும் வெளிப்படுகிறது. ப்ருஹத் ஆரண்யகம் மற்றும் ஸுபால உபநிஷத் போன்றவற்றில் உள்ள அந்தர்யாமி ப்ராஹ்மணத்தின் மூலம் அனைத்து சேதன-அசேதனங்களிலும் எம்பெருமான்

அந்தர்யாமியாக உள்ளான் என்பதும், அனைத்தின் அந்தராத்மாவாக இருந்து கொண்டு, தனது கட்டளைப்படி அவற்றை இயக்குகிறான் என்பதும் புலப்படுகிறது. இப்படியாக அந்தர்யாமித்வம் வெளிப்படுகிறது. அயந என்ற பதம், இண்கதௌ அல்லது அயகதௌ என்ற தாதுக்களில் இருந்து வெளிவந்தது என்று கொண்டால், “எந்த ஒன்றால் ஒரு வஸ்து அடையப்படுகிறதோ, அந்த உபாய வஸ்து அயநம் ஆகும்”, என்று உபாயத்வமும்; “எந்த வஸ்து அடையப்படுகிறதோ அது அயநம்”, என்று உபேயத்வமும் வெளிப்படுகிறது. பஹுவ்ரீஹி ஸமாஸத்தில், நார என்ற பதம் எம்பெருமானின் குணங்களைத் தவிர மற்ற பொருள்களைக் குறிக்கிறது என்றோம். இது போன்று, தத்புருஷ ஸமாஸத்தில் அயந என்ற பதம், உபாய-உபேய பொருள்களை உணர்த்தும்போது, நார என்ற பதம் அசேதனங்களைக் குறிக்கவில்லை, சேதனங்களை மட்டுமே குறிக்கிறது என்று கொள்ளப்படுகிறது. இதனை கீழே உள்ள வரிகளின் மூலம் அறியலாம்:

- பாத்மோத்ர புராணம் – நாரஸ்த்விதி ஸர்வ பும்ஸாம் ஸமூஹ: பரிகத்யதே கதிராலபம்பநம் தஸ்ய தேந நாராயணஸ் ஸ்ம்ருத: - ”நார” என்ற பதத்தால் அனைத்து ஜீவன்களும் கூறப்படுகின்றன. அவற்றின் உபாயமாகவும், அடையப்படும் இடமாகவும் இருப்பதால் நாராயணன் எனப்படுகிறான்.

- நாரசப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதேபுதை: தேஷாமயந பூதத்வாந் நாராயண இஹோச்யதே - அனைத்தும் அறிந்தவர்கள், ”நார” என்ற பதம் ஜீவன்களின் கூட்டம் என்ற பொருளையே உணர்த்துவதாகக் கூறுகின்றனர். அவர்களுக்கு ஆதாரமாக உள்ளதால் நாராயாணன் எனப்படுகிறான்.

102. “எம்பிரானெந்தை” என்கையாலே, ஈச்வரனே எல்லாவுறவுமுறையுமென்று சொல்லும்.

அவதாரிகை - கர்மணிவ்யுத்பத்தி ஸித்தமான ப்ராப்யத்வத்துக்கு ஸங்கோசமில் லாமையாலே ஸர்வ ப்ரகார விசிஷ்டமாயிருக்கையாலும், பந்து லாபமும் ப்ராப்யமாயி ருக்கையாலும், ஈச்வரனுடைய ஸர்வவித பந்துத்வமும் இப்பதத்திலே சொல்லும்படியை அருளிச் செய்கிறார் – எம்பிரான் - என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்ட உபேயத்வம் மூலமாக எம்பெருமான் அனைத்து வழிகள் மூலமாகவும், எந்தவிதமான தோஷங்களும் இன்றி அடையப்படு பவனாக உள்ளான் என்று உணரலாம். மேலும் எம்பெருமானுடன் நெருக்கமானதால், பந்துலாபம் என்பதும் அடையப்படவேண்டிய குறிக்கோளாக

(ப்ராப்யம்) உள்ளது. ஆக, ஸர்வேச்வரன் அனைத்து விதமான உறவினனாக உள்ளான் என்பதை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது நாராயண சப்தார்த்தத்தை அநுஸந்திக்கிற திருமங்கையாழ்வார், "எம்பிரானெந்தை யென்னுடைச் சுற்றமெனக் கரசென்னுடை வாணாள்" என்கையாலே, ஈச்வரனே இவ்வாத்மாக்களுக்கு ஸர்வவித பந்துவுமென்று இப்பதத்திலே சொல்லும் – என்கை.

**விளக்கம்** – திருமங்கையாழ்வார் "நாராயண" என்ற பதத்தின் பொருளை அருளிச் செய்யும்போது பெரிய திருமொழியில் (1-1-6) - எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம் எனக்கு அரசு என்னுடை வாணாள் - என்று அருளிச் செய்தார். ஆக நாராயண என்ற பதம், ஈச்வரனே அனைத்து ஆத்மாக்களுக்கும் அனைத்து விதமான உறவினன் என்பதை உணர்த்துவதாக உள்ளது.

103. நாம் பிறர்க்கான அன்றும் அவன் நமக்காயிருக்கும்.

அவதாரிகை – "இப்படி பந்து பூதனாய்க் கொண்டு, இத்தலைக்கு அவன் செய்யுமது எது?", என்ன, அருளிச்செய்கிறார் - நாம் பிறர்க்கான அன்றும் அவன் நமக்காயிருக்கும் – என்று.

**விளக்கம்** - இவ்விதம் நம்முடைய நெருக்கமாக உறவினனாக இருந்து கொண்டு ஈச்வரன் செய்யும் செயல் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, நாம் தன்னோடு ஒட்டற்றுப் பிறர்க்கு நல்லராயிருந்த காலத்திலும் அவன் நமக்கு நல்லனாயிருக்கும் என்கை.

**விளக்கம்** – நாம் அவனுடன் எந்தவிதமான தொடர்பும் கொள்ளாமல், மற்றவர்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருந்தாலும், அவன் நமக்குத் தொடர்ந்து நன்மை செய்தபடியே உள்ளான்.

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யார் திருவடிகளே சரணம்
ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

# திருவெழுகூற்றிருக்கை
(பகுதி – 2)

## ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த அவதாரிகை - 1

ஸம்ஸார ஸ்வபாவாநுஸந்தாநத்தாலே மிகவும் அவஸந்நரான ஆழ்வார் அதுக்குப் பரிஹாரமாக அவன் குணங்களை நெஞ்சாலே நினைத்தும், வாயாலே பேசியும், திருவடிகளிலே விழுந்தும் தரித்தார். “இங்ஙனே கிடந்து நோவுபடும் உமக்குத்தான் செய்ய வேண்டுவதென்?” என்று கேட்க, “த்வதநுபவ விரோதியாயிருக்கிற ஸம்ஸாரத்தை வாஸனையோடே போக்கித் தரவேணும்” என்றார். “அது பின்னை நம்மால் செய்யலாவதன்றே” என்ன. “உன்னையொழிந்த ஸகல பதார்த்தங்களினுடைய உத்பத்தியென்ன, ரக்ஷணமென்ன. இவற்றுக்குக் கடவையாய், ஸர்வஸமாச்ரயணீயனாய், ஆபத்ஸகனாயிருக்கிற நீயே என்னுடைய ஸம்ஸாரதுக்கத்தைக் கழித்துத் தருமித்தனையல்லாது என்னால் கழித்துக் கொள்ளப் போகாது”, என்று திருவடிகளிலே விழுந்து தம் தசையை அறிவிக்கிறாராயிருக்கிறது.

**விளக்கம்** – ஸம்ஸார வாழ்வின் தாழ்வையும் கொடுமையையும் எண்ணி, ஆழ்வார் மிகவும் அஞ்சியபடி நின்றார். இந்த வாழ்வுக்கு ஏற்ற பரிகாரமாக எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களைத் தனது நெஞ்சால் எண்ணியும், வாயால் புகழ்ந்தபடியும், அவன் திருவடிகளிலேயே விழுந்தபடியும் கிடந்தார்இதனை .க் கண்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், ”இவ்விதமாக நீவிர் மிகவும் வருந்தியபடி உள்ளீரே! உமக்கு நான் செய்ய வேண்டியது ஏதாவது உண்டா?”, என்று கேட்டான்,அதற்கு ஆழ்வார் . “உன்னுடைய அனுபவம் எனக்கு ஏற்படத் தடையாக உள்ள இந்த ஸம்ஸாரத்தை“அதன் வாசனையுடன் நீ நீக்கி விடவேண்டும் ,, என்றார்இதனை .க் கேட்ட பெரியபெருமாள், அதனை என்னால் செய்ய இயலாது“ அனுபவித்தே கழிக்கவேண்டும்) என்று கருத்து ,“(என்றான்இத .ற்கு ஆழ்வார், “உன்னைத் தவிர உள்ள அனைத்து வஸ்துக்களின் உற்பத்தி, ரக்ஷணம் ஆகியவற்றுக்கு ஆதாரமாகவும், அனைத்திற்கும் அண்டும் இடமாகவும், அனைத்திற்கும் துன்ப காலத்தில் துணையாய் நிற்பவனும் ஆகிய உன்னால் மட்டுமே என்னுடைய ஸம்ஸார துக்கத்தை நீக்க முடியும்இத .னை விடுத்து,

என்னாலே இதனைச் செய்ய இயலாது”, என்று தனது இயலாமையைக் கூறி, அவனது திருவடிகளில் சரணம் என்று விழுந்தார்.

### ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த அவதாரிகை - 2

முதலிலே கரணகளேபரவிதுரமாய், தமோபூதமாய், அவிஜ்ஞேய ஸ்வரூபமாய், அசித் கல்பமாயிருக்கிற இவற்றை அர்த்தித்வாதி நிரபேக்ஷமாக உன்னுடைய நிரவதிகதயையாலே உண்டாக்கின நீயேயருளிக் கடாக்ஷியாயாகில், அமூநி புவநாநி பவிதும் நாலம் முதலிலே இவையுண்டாகவே மாட்டாது. ஸத்தையே தொடங்கி உன்னதீநமான பின்பு உன்னையொழிய இவற்றுக்கு ஒரு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி கூடாதென்னுமிடம் சொல்லவேணுமோ? இதில்லாதவன்று உண்டாக்கின நீயே இதுக்கொரு போக்கடி பார்க்கையொழிய நானொன்று செய்து உன்னைப் பெறுகையென்றொரு பொருளுண்டோ?

**விளக்கம்** - ப்ரளயம் உண்டான காலத்தில் உடல் மற்றும் இந்த்ரியங்கள் இல்லாதவர்களாகதமஸ் என்னும் இருள் சூழ்ந்த ,வர்களாக, அறியாமையே ஸ்வரூபமாக அசித் பொருள்களுடன் வேறுபாடு காண இயலாமல் ஒன்றாகக் கலந்து நாங்கள் இருந்தோம். இப்படிப்பட்ட எங்களை, எங்களிடம் இருந்து எதனையும் எதிர்பாராமலேயே, உனது கருணை மூலம் நீ கடாக்ஷிக்கவில்லை என்றால் ஸ்தோத்ரரத்னம் – (10)அமூநி புவநாநி பவிதும் நாலம்– இந்த உலகங்கள் உண்டாகாது - என்னும்படி, இவை எதுவுமே உண்டாகாதுஆக . எங்களது அனைத்தும் உன்னையே அண்டி உள்ளது என்று கூறிய பின்னர் ,உனது ஆதரவு இல்லாமல் எங்களுக்கு ஏதேனும் தானாகவே கைகூடுவதோகைகூடாமல் , இர௶ப்பதோ நிகழாது என்று கூறவும் வேண்டுமோ இவ்விதம் என்னால் ?எதுவும் நானாகவே செய்ய இயலாதபோதுஎன்னை ,ப் படைத்த நீயே என்னிடம், என்னைக் காத்துக் கொள்ள ஏற்ற வழியைக் கூறவேண்டும். அப்படி அல்லாமல், நானாகவே முயற்சி செய்து உன்னை அடைவதற்கு ஏதேனும் வழி உண்டா?

சரணாமறை பயந்த இத்யாதி – ஜ்ஞாநாதிகனான சதுர்முகனோடே கூட உத்பத்தி விநாசாதிகளுக்குக் கர்மீபவிக்கிற ஸகல சேதனர்க்கும் ரக்ஷையென்று பெற்ற பெற்றவையெல்லாம், “நம் மேல் வினைகடிவான்” என்கிறபடியே ஆச்ரித விரோதி நிரஸநத்துக்காக்க் கையிலே திருவாழியை தரித்துக் கொண்டிருக்கிற உபகாரகனான அவன் பார்க்கில் பார்க்குமித்தனையல்லது வேறு கடல் சூழ்ந்த பூமியிலுள்ள சேதநர் தங்களுக்கு ரக்ஷை தாங்களன்றியார்கள். அவனையொழிய இவையறியாதொழிய வேண்டுகிறதென்னென்னில் நைவ கிஞ்சித் இத்யாதி – உனக்குப் பரோக்ஷமாயிருப்பதொன்றில்லை; எத்தனையேனும் ஜ்ஞாநாதிகரா யிருப்பார்க்கும் நீ கண்ணுக்கு விஷயமாகாய்; உனக்குக் கைபுகராதது ஒன்றுமில்லை; எத்தனையேனுமதிசயித ஜ்ஞாநர்க்கும் நீ கைபுகுந்தாயாயிராய்.

இத்தால் சொல்லிற்றாயற்றதென்னென்றால், ஒருவனுக்குக் கண்ணும் தோற்றாதே காலும் கடைதாராதேயிருப்பது, ஒருவனுக்குக் கண்ணுந்தோற்றிக் காலும் கடை தருவது. இப்படியிருந்தால் ஆர் வழி காட்டிக்கொடு போவார்கள்? நான் அஜ்ஞனாய் அசக்தனாயிருந்தேன். நீ ஸர்வஜ்ஞனாய் ஸர்வ சக்தியாயிருந்தாய். இங்ஙனேயிருந்த பின்பு நீ என் கார்யஞ்செய்து தலைக்கட்டுமித்தனை போக்கி நான் என் கார்யம் செய்து தலைக்கட்டுகை என்றொரு பொருளுண்டோ? என்கிறார். நீ தந்த ஜ்ஞாநங்கொண்டு அறியப் பார்த்தாலும் அறிந்தபடி செய்து தலைக்கட்டுகைக் கீடான சக்தியெனக்குண்டோ?

**விளக்கம்** – முதல் திருவந்தாதியில் (60) - சரணாமறை பயந்த - என்று அருளிச்செய்தது காண்க. இந்த உலகில் உள்ள அனைவரும் கரையேறும் வழிமுறைகளை உபதேசிக்கின்ற வேதங்களை அறிந்தவனான ப்ரம்மன் தொடங்கி பலவிதமான உயிர்களுக்கும் ரக்ஷை என்று பெயர் பெற்ற செயல்கள் எவை ? பெரியதிருவந்தாதி (87) – நம் மேல் வினை கடிவான் - என்பதற்கு ஏற்ப அடியார்களின் விரோதிகளை அழிப்பவனான சக்கரத்தாழ்வானை ஏந்தியபடி நிற்கும் உன்னுடைய செயலே அல்லவா ரக்ஷை என்பது? ஆயினும் கடலால் சூழப்பட்ட இந்த உலகில் உள்ளவர்கள் தங்களுக்கு ரக்ஷை எது என்றே அறியாதவர்கள் ஆவர். இப்படி உள்ளபோது உன்னைத் தவிர தங்களுக்குத் தாங்களே பாதுகாப்பை எவ்வாறு அளித்து கொள்ள இயலும்? ஜிதந்தே ஸ்தோத்ரம் (1-6) - ந ஏவ கிஞ்சித் பரோக்ஷம் – உன்னால் அறிய இயலாதது ஏதும் இல்லை, எத்தனை அறிவு கொண்டவர்களாக இருந்தாலும் அவர்களால் நீ அறிய இயலாமலேயே உள்ளாய்; உன்னால் அடைய இயலாதது ஏதும் இல்லை, எத்தனை அறிவு கொண்டவர்களாக இருந்தாலும் தங்கள் முயற்சியால் அறிய இயலாதவனாகவே நீ உள்ளாய். உதாரணமாக ஒருவனுக்குக் கண்கள் குருடு, கால்கள் முடம் என்று வைத்துக் கொள்வோம். வேறு ஒருவனுக்கு இவை இரண்டும் நன்றாகவே உள்ளது என்று வைப்போம். இவர்களில் யார் வழிகாட்ட யார் செல்வார்கள்? இது போன்றே, நான் அறிவற்ற குருடனாக ,கால்முடமானவனாக உள்ளேன். நீயோ அனைத்தையும் அறிந்தவனாக, அனைத்து வலிமையும் உள்ளவனாக இருக்கிறாய். இப்படி உள்ளபோது நீயாகவே என்னை காப்பாற்றுதல் என்னும் செயலைச் செய்யவேண்டும் அல்லாமல், நானே என்னைக் காப்பாற்றுதல் என்பதைச் செய்ய இயலுமா? நீ எனக்கு அளித்த ஞானத்தைக் கொண்டு என்னை எப்படிக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் அறிந்தாலும், அதனைச் செய்யும் சக்தி எனக்கு உள்ளதா?

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த வ்யாக்யானம் – 1

ஆழ்வாருக்கு முதலிலே செப்பேட்டைக் கையிலே கொடுத்து நிதியைக் காட்டிக் கொடுப்பாரைப் போலே திருமந்த்ரத்தையும் அதிலர்த்தத்துக்கெல்லை நிலைமாகக் கோயில்களையும் காட்டிக் கொடுக்கக் கண்டு க்ருதக்ருத்யராய் ஸம்ஸாரத்தையும் பரமபதத்தையும் ஒக்க மறந்தார். ஆழ்வாரைப் பார்த்து எம்பெருமான் "நீரிருக்கிறது ஸம்ஸாரத்திலே கிடீர்" என்றருளிச்செய்ய, அதின் கொடுமையை அநுஸந்தித்து ஆற்றாமையாலே மநோவாக்காயங்களாலே எம்பெருமானை அநுபவித்து ஆற்றப் பார்த்தார். அது பண்டையிலும் இரட்டியாய், மிகவுமாற்றாமையாலே எம்பெருமானுடைய சரண்யத்வத்தைப் பேசிக் கொண்டு, அதுக்கெல்லை நிலமான திருக்குடந்தையில் ஆராவமுதாழ்வார் திருவடிகளையே எத்தசைக்கும் இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் உபாயமாகப் பற்றி முடிக்கிறார்.

**விளக்கம்** – புதையல் இருக்கும் இடத்தைக் காண்பித்துக் கொடுக்கும் குறிப்புகள் உள்ள செப்பு ஏட்டையும் கொடுத்து, அந்த ஏட்டில் கூறப்பட்டுள்ள புதையல் எங்கு உள்ளது என்று தெளிவாகக் கூறுவது போன்று – எம்பெருமான் ஆழ்வாருக்குச் செய்தது என்னவெனில் – திருமந்த்ரத்தை உபதேசித்து, அதன் மூலம் கூறப்படும் முக்கியமான அர்த்தமான எம்பெருமானின் குணங்களை வெளிப்படுத்தும் இடமாக உள்ள பல திவ்ய தேசங்களையும் காட்டிக் கொடுத்தான். இதனைக் கண்டு மனநிறைவு கொண்ட ஆழ்வார் ஸம்ஸாரத்தை மறந்ததோடு அல்லாமல், பரமபதத்தையும் மறந்து நின்றார். இதனைக் கண்ட எம்பெருமான், "இவர் பரமபதம் செல்லவேண்டும் என்பதையும் மறந்தாரே", என்று கருத்தில் கொண்டு ஆழ்வாரிடம், "நீவிர் உள்ளது ஸம்ஸாரத்தில் என்று அறிவீர் அல்லவோ?", என்று கூறு, ஸம்ஸாரத்தின் கொடுமைகளைச் சுட்டிக் காண்பித்தான். இதனைக் கண்ட ஆழ்வார் அந்தக் கொடுமைகளைப் பொறுக்க மாட்டாதவராக தனது மனம் மற்றும் சொற்கள் கொண்டு எம்பெருமானை முழுவதுமாக அனுபவித்து, தனது துன்பத்திற்கான ஆறுதல் தேட முயன்றார். இதனால் அவன் மீது கொண்ட ஆசை என்பது இரண்டு மடங்காக்கி, அவனது பிரிவுத் துன்பமும் சேர்த்து வாட்டியது. இதன் காரணமாக அனவராலும் சரணம் என்று புகத்தகுதியாக உள்ள அவனது சரண்யத்வம் பற்றி விரிவாகப் பேசி, அந்த சரண்யத்வத்தின் எல்லையை விளக்கும்படியாக உள்ள திருகுடந்தை ஆராவமுதனின் திருவடிகளைப் பற்றினார். அவையே தனது எந்தவிதமான துன்பதிற்கும் ஆறுதல் என்றும், தனது விருப்பங்கள் நிறைவேறும் இடமாக உள்ளது என்பதையும் கூறி, அந்தத் திருவடிகளையே உபாயம் என்று பற்றி, இந்தப் பிரபந்தத்தை நிறைவு செய்கிறார்.

(ஒரு பேரித்யாதி) – ஸ்வவ்யத்ரிக்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும் அத்விதீய காரணமாய், அதுக்குத் தக்க பரப்புடைய திருநாபியிலே, அப்பரப்படலங்கலும் கண்

செறியிட்டாற்போலே பெருத்திருக்கிற மலராகிற ஆஸநத்திலே, ஒருகால் இதர விஸஜாதீய ஜந்மாவான சதுர்முகனையுண்டாக்கினாய். ஒரு காலென்றாலும் ப்ரவாஹரூபேண நித்யமாயிருக்குமிறே. நாவேக்ஷஸே.

**விளக்கம்** - தன்னைத் தவிர மற்ற பொருள்கள் அனைத்தின் காரணமாகவும், அவை உண்டாவதற்கு வேறு ஒரு காரணம் இல்லாமலும். இவை அனைத்தையும் உண்டாக்குவதற்கு ஏற்றபடி மிக பெரிய பரப்பளவு உள்ள திருநாபியில், அந்தப் பரப்பளவு முழுவதும் மறைப்பது போன்று பெரியதாக உள்ள தாமரை மலர் என்னும் இருக்கையின் மீது, மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்ட பிறப்புடையவனாகிய நான்முகனைப் படைத்தாய். "ஒரு கால்" என்று கூறியது ஸ்ருஷ்டி என்பது ஒவ்வொரு ப்ரளயத்தின் முடிவிலும் ஏற்படுவதால், எப்போதும் நிகழ்வது என்பதை உணர்த்துவதாகிறது. ஸ்தோத்ர ரத்னம் (10) – நாவேக்ஷஸே – நீ கடாக்ஷிக்கவில்லை என்றால் ஸ்ருஷ்டி எவ்வாறு நிகழும் – என்றது காண்க.

(ஒரு பேருந்தியித்யாதி) – ஜகத்து ப்ரளயங்கொண்ட காலத்து உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே இவற்றினுடைய ஸத்தையை உண்டாக்கினவனே! (ஒரு பேருந்தி) ப்ரதாநமாய் ஆத்யமாயிருந்த திருநாபியிலே. (இருமலர்த் தவிசில்) – பெரிய தாமரைப்பூவின் அல்லியிலே. (ஒருமுறை அயனை ஈன்றனை) – ஒருகால் ஜகத் ஸ்ருஷ்டிக்கடியாக ப்ரஹ்மாவை உண்டாக்கினாய். இவற்றினுடைய ஸத்தாதிகளை முதலிலேயுண்டாக்கின உனக்கே பரமன்றோ எல்லா ரக்ஷையுமென்கிறார். நீயுண்டாக்கின இதுக்கு ஒரு குணம் பிறப்பிக்க அரிதோ?

**விளக்கம்** – (ஒரு பேர் உந்தி)– இந்த உலகத்தைப் ப்ரளயம் மூழ்கடித்த காலத்தில் எதனையும் எதிர்பாராமல் ,உனது கருணையால் இவை அனைத்திற்கும் "இருப்பு" என்பதை உண்டாக்கினவனே !(ஒரு பேர் உந்தி)– அனைத்திற்கும் பிறப்பிடமாக ஆதியாக உள்ள திருநாபி. (இருமலர்) - மிகப் பெரிய இதழ்களை உடைய தாமரையின் பெரிய இதழ்களில். (ஒரு முறை)– முன்பு ஒரு கால கட்டத்தில், இந்த உலகின் ஸ்ருஷ்டியின் பொருட்டு, நான்முகனைப் படைத்தாய். இவை அனைத்திற்கும் "இருப்பு" என்பதை ஏற்படுத்திய உனக்கே, இவை அனைத்தையும் காக்கும் பொறுப்பும் உள்ளது என்றார். நீ படைத்த இவைகளுக்குப் பெருமையை அளிப்பது உனக்குக் கடினமோ?

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

# திருமாலை

(பகுதி – 9)

(ஆதலால் பிறவி வேண்டேன்) – நாடு பிடித்தார்க்கு ஒழுகைக் காட்டி குட்டமும் திடரும் மணலும் மடையுமாக எழுதி வெறும் பாழாக்கிக் காட்டுவாரைப் போலே, திருநாமம் சொல்லுகைக்கு அவஸரமில்லாதபடி உள்ள ஆயுஸ்ஸு புறம்பே செல்லுகிறபடியைப் பேசி, பெரியபெருமாளுக்கு விண்ணப்பம் செய்கிறார். நீர், "அச்சுவை பெறினும் வேண்டேன்", "ஆதலால் பிறவி வேண்டேன்" என்று விபூதி த்வயத்துக்கும் கண்ணழிவு சொல்லா நின்றீர். "நிற்பாயாகில் திருவாணை; கிடப்பாயாகில் திருவாணை" என்பாரைப் போலே நீர் படுத்துகிறதென்? நமக்கு விபூதி த்வயமேயன்றோ உள்ளது என்ன; (அரங்கமா நகருளானே) – விபூதி த்வயத்துக்கும் புறம்பாய் த்ருதீயா விபூதியான கோயிலிலே எனக்கு ஓரிருப்பிடம் அரிதோ? என்கிறார்.

**விளக்கம்** – ஓர் இடத்தை வாங்க விரும்பும் ஒருவன் அந்த இடத்தின் பல்வேறு இடங்களை, அதனை விற்பவரிடம் காண்பித்து, "இதோ பள்ளம் உள்ளது, இதோ குன்றாக உள்ளது, மணலும் சகதியுமாக உள்ளது", என்று குறை கண்டு பிடிப்பான். இதன் மூலம் நிலத்தின் விலையைக் குறைக்க முயல்வான். இது போன்றே ஆழ்வாரும், திருநாமம் கூறுவதற்குக் குறையாக தனது ஆயுள் அனைத்தும் உலக விஷயங்களில் ஈடுபடுவதைக் கூறுகிறார். இதனைக் கேட்ட பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "ஆழ்வாரே! பரமபதம் அளிக்கிறேன் என்றால் – அச்சுவை பெறினும் வேண்டேன் – என்கிறீர்; சரி, இங்கேயே இருப்பீர் என்றால் - ஆதலால் பிறவி வேண்டேன் - என்கிறீர்; இப்படியாக நமது இரண்டு விபூதிகளுக்கும் ஏதோ காரணம் கூறுகிறீர்; நின்றாலும் கட்டளை இடுவேன், படுத்துக் கிடந்தாலும் கட்டளை இடுவேன் என்று கூறுபவர் போன்று நீவிர் நடந்து கொள்கிறீரே! நம்மிடம் இரண்டு விபூதிகள் மட்டுமே உள்ளன; உமக்கு அளிக்க வேறு இடம் இல்லையே", என்றான். (அரங்கமா நகருளானே) – இதனைக் கேட்ட ஆழ்வார் சட்டென்று, "உனது இந்த இரண்டு விபூதிகளுக்கும் வேறுபட்டதாக, மூன்றாவது இருப்பிடமான திருவரங்கத்திலேயே நான் இருக்க எனக்கு ஓர் இடம் அளிப்பது உனக்குக் கடினமான செயலோ?", என்றார்.

கோயிலில் வந்தால் – அதிபால்யத்தில் அந்நப்ராசநத்துக்கு என்றாகிலும் திருவடிகளிலே கொண்டு புகுருவர்கள்; க்ரீடாவஸ்தையிலும் பாலா அபி க்ரீடமாநா: என்கிறபடியே செல்வர் எழுந்தருளும்படியை அநுகரியா நிற்பர்கள். பக்வனானால் தான் விரும்பின விஷயங்களைப் பற்ற உள்ளே புகக் கடவனாயிருக்கும். பெருமாளுடைய வடிவழகும், அங்குத்தை பாவநத்வமும் விஷயாந்தரங்களில் துவக்கையும் அறுக்கும். வ்ருத்தனாய் உள்ளுப் புகமாட்டாதவற்றைக்கு, இவன் வாசலிலே வந்து நிற்பர். ஆக இப்படி வாஸிதமாகையாலே ஸ்வப்நத்திலும் காண்பது இவ்வடிவேயாயிருக்கும். இனி தேசோ அயம் ஸர்வகாமதுக் என்கிறபடியே தேசந்தானே எல்லா நன்மைகளையும் பண்ணிக் கொடுக்கவற்று; ஆகையாலே கோயில் வாஸம் அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லா நிற்குமிறே.

**விளக்கம்** – திருவரங்கம் பெரியகோயிலில், குழந்தையை அன்னப்ராசனம் (முதல் முறையாக சாதம் ஊட்டுதல்) செய்யும் பொருட்டு பெரியபெருமாளின் திருவடிகளில் கொண்டு வருவார்கள். பாலகனாக உள்ளபோது, இராமாயணம் - பாலா அபி க்ரீடமாநா: - விளையாடும் சிறுவர்களுடன் – என்னும்படி, நம்பெருமாள் எழுந்தருளும்படியான விளையாட்டைப் போலியாகச் செய்து விளையாடுவான். வாலிபப் பருவத்தின், தான் காண விரும்பும் பெண்ணைக் காண்பதற்காகப் பெரியகோயிலுக்குள் புகுவான். பின்னர் பெரியபெருமாளின் திருமேனி அழகு, திருவரங்கத்தின் வினை தீர்க்கும் மேன்மை ஆகியவை இவனுக்கு உலக விஷயங்களின் மீது உள்ள பற்றுதலை நீக்கிவிடும். இவன் நோய் காரணமாகவோ, வயோதிகம் காரணமாகவோ கோயிலுக்குள் சென்று நம்பெருமாளைக் காண இயலாமல் தவிக்கும்போதும், நம்பெருமாளே இவன் உள்ள வீட்டின் வாசலுக்கு முன்பாக வந்து நிற்பான். இப்படியாக எப்போதும் நம்பெருமாளின் சிந்தனையாகவே இவன் உள்ளதால், கனவில் காண்பதும் அரங்கனின் திருமேனியே என்றாகிவிடும். கருடபுராணம் - தேசோ அயம் ஸர்வகாமதுக் – இந்தத் தேசம் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுவதாக உள்ளது – என்று கூறுவதற்கு ஏற்ப, திருவரங்கம் அனைத்து நன்மைகளையும் அளிப்பதாகவே உள்ளது. ஆக பெரியகோயிலில் வசித்தல் என்பது இவர் விரும்பும் சிறப்புகள் கொண்டது என்றாகிறது.

4. மொய்த்த வல்வினையுள் நின்று மூன்று எழுத்து உடைய பேரால்
கத்திர பந்தும் அன்றே பராங்கதி கண்டு கொண்டான்
இத்தனை அடியர் ஆனார்க்கு இரங்கும் நம் அரங்கனாய
பித்தனைப் பெற்றும் அந்தோ! பிறவியுள் பிணங்குமாறே.

**பொருள்** – க்ஷத்ரபந்து என்பவன் மிகவும் அடர்ந்ததும், வலிமை கொண்டதும் ஆகிய பாவக்கடலில் நின்றபடி, "கோவிந்தா" என்னும் மூன்று எழுத்து திருநாமம் ஓதி, உயர்ந்த கதியான மோக்ஷம் பெற்றான். இப்படிப்பட்ட பாவம் செய்தவர்களுக்கும் இரங்கி நிற்பவன், தனது அடியார்களிடம் பித்துப் பிடித்தவன் போல் உள்ளவன் ஆகிய பெரியபெருமாளை நாம் நமக்கு ஸ்வாமியாகக் கொண்டுள்ளோம். அதன் பின்னரும் பல பிறவிகள் எடுத்து வருந்துவது ஏனோ?

அவதாரிகை – கீழ் மூன்று பாட்டாலும் ஸ்வலாபத்தைப் பேசி, அநந்தரம் பதினோரு பாட்டாலே பரோபதேசம் பண்ணுகிறார். ஸ்வாநுபவத்தை விட்டு, பரோபதேசம் பண்ணுகைக்கு ஹேதுவென் என்னில் – ப்ராப்தமுமாய் ஸுலபமுமான இவ்விஷயத்தை ஸம்ஸாரிகள் இழக்கிற இழவைப் பொறுக்கமாட்டாமையாலும் இவ்விஷயந்தான் ஸஹகாரியைப் பெற்றல்லது தனியநுபவிக்க அரிதாகையாலும் ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத என்கிறபடியே, அநுபூதாம்சம் பிறரை அநுபவிப்பித்தல்லது நிற்கமாட்டாத ப்ரக்ருதியாகையாலும் பரோபதேசத்திலே ப்ரவ்ருத்தராகிறார். இதில் முதற்பாட்டில், ஸம்ஸாரிகள் "பாபிகளான எங்களுக்குத் திருநாமம் சொல்லுகைக்கு யோக்யதையுண்டோ" என்ன; "ப்ராயச்சித்த ஸாத்யமல்லாதபடி பாபப்ரசுரனான க்ஷத்ரபந்துவும் திருநாம ப்ரபாவத்தாலே பரமபத ப்ராப்தியைப் பண்ணினபடியைக் கேட்டார்க்கு "அயோக்யன்" என்று அகல விரகுண்டோ?" என்றவிடத்திலும் விமுகராகக் கண்டவாறே "இத்தைக் கேட்டுவைத்தும் பாபபலமான ஜந்மாதி க்லேசத்தை அநுபவிப்பதே" என்று விஸ்மிதராகிறார்.

**விளக்கம்** – இதுவரை கண்ட மூன்று பாசுரங்கள் மூலமாக தான் அடைந்த பேற்றினைக் கூறினார். அடுத்து, இந்தப் பாசுரம் தொடங்கி அடுத்து வரும் பதினொரு பாசுரங்களால் மற்றவர்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்குகிறார். தான் எம்பெருமானைத் தொடர்ந்து அனுபவிப்பதை விட்டு, மற்றவர்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்குவதற்கு என்ன காரணம்? தாங்கள் அடையவேண்டியதாகவும், மிகவும் சுலபமாக உள்ளதும் ஆகிய இந்த மார்க்கத்தை ஸம்ஸாரிகள் இழந்து நிற்கும் நிலையை இவரால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. இந்த மார்க்கத்தின் மேன்மையைக் காணும்போது, இதனை அனுபவிக்க பலரின் துணை தேவை என்றும், தனியே நின்று அனுபவிக்க இயலாது என்றும் உணர்ந்தார். மேலும், மஹாபாரதம் - ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத – நல்ல உணவைத் தனியாக உட்கொள்ளக் கூடாது – என்றது. இவர், தான் அனுபவிக்கும் உயர்ந்த வஸ்துவை மற்றவர்கள் அனுபவிக்காமல் இருப்பதைப்

பொறுக்காதவர் ஆவார். ஆகவே மற்றவர்களுக்கு எம்பெருமானைக் குறித்து உபதேசம் செய்கிறார். இனிவரும் பதினோரு பாசுரங்களில் முதல் பாசுரத்தில் (திருமாலை – நான்காம் பாசுரம்) ஸம்ஸாரிகள் இவரிடம், "மிகுந்த பாவங்கள் செய்யும் எங்களுக்கு அவனது திருநாமத்தைக் கூறும் தகுதி உண்டோ?", என்றனர். அதற்கு இவர், "ப்ராயச்சித்தம் செய்தாலும் கழியாத பல பாவங்களை க்ஷத்ரபந்து என்பவன் செய்தான். அப்படிப்பட்ட அவன்கூட எம்பெருமானின் திருநாமத்தின் மேன்மை காரணமாகப் பரமபதம் பெற்றான் என்று தர்ம சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இவற்றை அறிந்த பின்னரும் – எங்களுக்குத் தகுதியில்லை – என்று நீங்கள் விலகி நிற்கலாமோ?", என்றார். அதன் பின்னரும் ஸம்ஸாரிகள் திருநாமத்தில் ஈடுபடாமல் நிற்பதைக் கண்டார். ஆகவே, "திருநாமத்தின் மேன்மைகளைக் கேட்ட பின்னரும், அதனைக் கூறாமல், பாவங்களின் பலனாகிய பிறப்பு-இறப்பு என்ற துன்பங்களை அனுபவித்தபடி உள்ளனரே", என்று வியந்து நிற்கிறார்.

வ்யாக்யானம் – (மொய்த்த வல்வினை) – பாபங்கள் மிகைத்து "நான் முற்பட நான் முற்பட" என்று மேல் விழுந்து மொய்த்துக் கொண்டு கிடக்கிறபடி. தேன்கூட்டை ஈ மொய்த்துக் கொள்ளுமாபோலே மொய்த்துக் கொள்ளுகை. "நெய்க்குடத்தைப் பற்றியேறுமெறும்புகள்" என்னக் கடவதிறே. முதலிகள் லங்கையை "எனக்கு எனக்கு" என்னுமாபோலே. மேருமந்தரமாத்ர: அபி, இஷீகதூலமக்நௌ ப்ரோதம். ஜகத் ஸ்ருஷ்டியில் ஈச்வரனுக்குண்டான சக்தி போரும் சேதநனுக்கு பாபஸ்ருஷ்டியிலுண்டான சக்தியும். (வல்வினை) – ஒரு பாபந்தானே காலதத்வமுள்ளதனையும் அநுபவிக்க வேண்டும்படியிறே இதின் பலமிருப்பது. யத் ப்ரஹ்ம கல்பநியுதாநுபவே அபி. ஒரு ஸர்வசக்தி போக்குதல் தவிருதல் செய்ய வேண்டும்படியிறே பாபத்தின் கனமிருப்பது.

**விளக்கம்** - (மொய்த்த வல்வினை) – பாவங்களின் கூட்டம் அதிகமாகி இவன் மீது (இவன் என்பது க்ஷத்ரபந்து) விழுந்து, "நான் முந்தி, நீ முந்தி" என்று கூவும்படியாக உள்ள நிலை. தேன் நிறைந்த ஜாடியை ஈக்கள் மொய்ப்பது போன்று இவனைப் பாவங்கள் மொய்த்தபடி உள்ளன. பெரியாழ்வார் திருமொழியில் (5-2-1) - நெய்க்குடத்தைப் பற்றியேறு மெறும்புகள் – என்றார் அல்லவோ? வானரவீரர்கள் இலங்கையை அழிக்கும்போது, "நான் அழிப்பேன் நான் அழிப்பேன்" என்பது

போன்று, பாவங்கள் இவனை “நான் அழிப்பேன் நான் அழிப்பேன்” என்றபடி இருந்தன. விஷ்ணுதர்மம் - மேருமந்தரமாத்ர: அபி – மேருமலை மந்த்ர மலை போன்ற பாவக்குவியல் – என்று கூறுவது போல் உள்ள பாவமலையானது, சாந்தோக்ய உபனிஷத் - இஷீகதூலமக்நௌ ப்ரோதம் – தீயில் இடப்பட்ட பஞ்சு எவ்விதம் எரிகிறதோ – கூறுவது போன்று திருநாமம் என்னும் தீயால் எரிக்கப்படுகின்றன. இந்த உலகைப் படைப்பதில் ஸர்வேச்வரனுக்கு எந்த அளவு சக்தி உள்ளதோ, அந்த அளவிற்கு ஜீவனுக்குப் பாவங்களைப் படைப்பதில் சக்தி உள்ளது என்று கூறலாம்படி ஜீவன் உள்ளான். (வல்வினை) – இவனது ஒரே ஒரு பாவம் மட்டுமே காலம் என்பது உள்ளவரை அதன் பலனை அனுபவித்துக் கழிக்கும்படி உள்ளது, ஆக ஒரு பாவத்திற்கு மட்டுமே இத்தனை பலம் உள்ளது. ஸ்ரீவைகுண்டஸ்தவம் - யத் ப்ரஹ்ம கல்பநியுதாநுபவே அபி – எந்தப் பாவம் பல்லாயிரம் ப்ரஹ்ம கல்பகாலங்கள் அனுபவித்தாலும் கழியாதோ – என்றது காண்க. எம்பெருமானே இரங்கி, ”இந்தப் பாவங்களைப் போக்குகிறேன்”, என்று கூறி இவனைத் தண்டிக்காமல் தவிர்த்தால் மட்டுமே பிழைக்க இயலும் என்னும்படியாக இந்தப் பாவங்களின் கனம் உள்ளது.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

… தொடரும்

# திருவரங்கத்தமுதனார் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

திருவரங்கத்தமுதனாரின் திருநக்ஷத்ரம் பங்குனி மாதம் ஹஸ்தம் (22.03.2008) ஆகும். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்னும் நூலில் இருந்து திருவரங்கத்தமுதனார் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன.

## கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

திருவரங்கத்தமுதனாருக்குத் திருவவதார ஸ்தலம் திருவரங்கம். திருத்தகப்பனார் அணியரங்கத்தமுதனார். குடி மூங்கில். திருநாமங்கள் மூங்கில் குடியமுதனார். புருஷகாரர் கூரத்தாழ்வான். ஆசார்யர் எம்பெருமானார். இருப்பிடம் கோயில். திருவாராதனம் நம்பெருமாள். இவர் செய்தருளின ப்ரபந்தம் ப்ரபன்ன காயத்ரியான நூற்றந்தாதி நூற்றெட்டு பாட்டு. இவர் திருநக்ஷத்ரம் பங்குனி ஹஸ்தம். இவர் நூற்றெட்டு வருஷம் எழுந்தருளியிருந்தார்.

## தனியன்

ஸ்ரீரங்கே மீநஹஸ்தே ச ஜாதம் ரங்கார்யநந்தநம்
ராமாநுஜ பதாஸ்கந்தம் ரங்கநாத குரும் பஜே

பொருள் – திருவரங்கத்தில் பங்குனி ஹஸ்தத்தில் அவதாரம் செய்தவரும், அணியரங்கத்து அமுதனாரின் திருக்குமாரரும், எம்பெருமானாரின் திருவடிகளைப் பற்றியவரும் ஆகிய திருவரங்கத்தமுதனாரை நான் வணங்குகிறேன்.

## நம் உடையவரைத் தஞ்சம் அடைந்த அமுதனார் திருவடிகளே சரணம்

# பெரியபெருமாள் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

பெரியபெருமாளின் திருநக்ஷத்ரம் பங்குனி மாதம் ரேவதி (06.04.2008) ஆகும். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்னும் நூலில் இருந்து பெரியபெருமாள் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன.

## கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

ஆழ்வார்கள் பாடின திருப்பதிகள் நூற்றெட்டு. அதில் முக்கியமான திருப்பதிகள் – ஸ்ரீரங்கமங்கள மணிம் கருணா நிவாஸம் ஸ்ரீவேங்கடாத்ரி சிகராலய காளமேகம் ஸ்ரீஹஸ்திசைல சிகர உஜ்ஜ்வல பாரிஜாதம் ஸ்ரீசம்நமாமி சிரஸா யதுசைலதீபம் (திருவரங்கத்திற்கு மங்களமணி போன்ற ஸ்ரீரங்கநாதன், கருணைக்கு இருப்பிடமாகவும் திருவேங்கடமலையின் உச்சியில் உள்ள கார்மேகம் போன்ற திருவேங்கடவன், அத்திகிரி மலையின் உச்சியில் காணப்படும் பாரிஜாத போன்ற பேரருளாளன், யதுகிரி குன்றின் மீது காணப்படும் விளக்கு போன்ற திருநாராயாணன் ஆகியவர்களை எனது தலையால் வணங்கி நிற்கிறேன்) – என்று சொல்லுகிறபடியே புஷ்ப த்யாக போக ஜ்ஞான மண்டபங்கள்.

அதிலும் ப்ரதானமானது ஸாக்ஷாத் பரமபதமான நம்பெருமாள் கோயில். எங்ஙனே என்னில் – காவேரீ விரஜா ஸேயம் வைகுண்டம் ரங்கமந்திரம் ஸ வாஸுதேவோ ரங்கேச: ப்ரத்யக்ஷம் பரமம் பதம் (பரமபதத்தில் காணப்படும் விரஜா நதியே இங்கு காவேரியாக உள்ளது, வைகுண்டமே பெரியகோயிலாக உள்ளது, பரவாஸுதேவனே ஸ்ரீரங்கநாதனாக உள்ளான், இப்படியாக திருவரங்கம் என்பது கண்களால் காணக்கூடிய பரமபதமாக உள்ளது) என்று சொல்லுகிறபடியே. இப்படி ஸாக்ஷாத் பரமபதமான நம்பெருமாள் கோயிலுக்கு ராஜாவானவர் பரமபதராஜர், ஸ்ரீரங்கராஜர். இப்ப்டி ஸ்ரீரங்கராஜரான பெரியபெருமாளுக்குத் திருநக்ஷத்ரம் பங்குனியில் ரேவதி. திருநாமங்கள் ஸ்ரீரங்கராஜர், நம்பெருமாள், அழகியமணவாளப்பெருமாள், முன்னிலும் பின்னழகிய பெருமாள், ஆபரணத்துக்கு அழகு கொடுக்கும் பெருமாள், வந்தவழிவாராத பெருமாள், மந்தாரங்கண்டு மறையும் பெருமாள், தேவசிகாமணிப்பெருமாள். சிஷ்யைகள் ஸ்ரீபூமிநீளாதிகளான நாச்சிமார்கள்.

## தனியன்

லக்ஷ்மீ கல்பலதா உத்துங்க ஸ்தந ஸ்தபக சஞ்சல:
ஸ்ரீரங்கராஜ ப்ருங்கோ மே ரமதாம் மாநஸாம்புஜே

பொருள் – பெரியபிராட்டியாரான ஸ்ரீரங்கநாச்சியார் ஒரு கற்பகக் கொடி போன்று உள்ளாள். அவளது ஸ்தங்கள் அந்தக் கற்பகக் கொடியில் உள்ள மலர்க்கொத்து போன்று உள்ளன. அந்த மலர்க்கொத்துக்களை, ஸ்ரீரங்கநாதன் ந்ன்ற கருவண்டு வட்டம் அடித்தபடி உள்ளது. இப்படிப்பட்ட அந்த வண்டானது எனது மனம் என்னும் தாமரையில் எப்போதும் மகிழ்வுடன் வாசம் செய்தபடி இருக்கவேண்டும்.

### சரணாகதி நெறி உணர்த்திய எம்பெருமானாருக்கு சகலமுமாய் நின்ற பெரியபெருமாள் திருவடிகளே சரணம்